வருகிறார்கள். கிட்டத்தட்ட தலைமைப் பதவி மேற்பார்வை செய்யும் பதவியாக இருப்பதால் அதை மாற்றுவதற்கான உத்தேசம் இல்லை. உசிதம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: தலைவரவர்களே, மொழி பெயர்ப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதல் ஏன் பெற வேண்டும்.? நிதி என்றாலும் கூட மத்திய அரசின் நிதியை வற்புறுத்துவதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் நாமே தமிழிலே இதைக் கொண்டு வருவதற்கு நம்முடைய நிதியைச் செலவழிக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, மத்திய சட்டங்கள் நிறைய இருக்கின்றன. மாநில சட்டங்களைப் பொறுத்த வரையில் மாநில அரசு மொழி பெயர்த்து வருகிறது. மத்திய சட்டங்களை மொழி பெயர்க்க வேண்டுமென்றால் அதன் நகலை அவர்களுக்கு அனுப்பி, அவர்கள் பரிசீலித்து ஒப்புதல் அளிக்க வேண்டும். குறிப்பாக மத்திய சட்டங்களைப் பொறுத்த வரையில்தான் மத்திய அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெற வேண்டி இருக்கிறது.

திருமலையம்பாளையம் பேரூராட்சியில் நீர்த்தேக்கத் தொட்டி.

*வினா எண் 49. — திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) மதுக்கரை ஒன்றியம், திருமலையம்பாளைம் பேரூராட்சி தெப்பக்குளத்துப் பாறை குடிநீர் கிணற்றில் நிலமட்டத் தொட்டி கட்ட ஒன்றியத்திற்குப் பங்குத் தொகை செலுத்தப் பட்டதா ?

(ஆ) எவ்வளவு தொகை செலுத்தப்பட்டது?

(இ) நிலமட்டத் தொட்டி எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம். (ஆ) ரூ. 2,500.

(இ) இப் பகுதி தண்ணீர் பற்றாக்குறை இனம் 3 இல் வருவதால் மேற்படி இடத்தில் நிலமட்டத் தொட்டிகட்ட கோவை குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளரிடம் கோரப் பட்டுள்ளது.